**OS No.61/2025**

**PW–1 –**சரசு என்கிற **சரஸ்வதி**

**த/பெ.**

**நாள். 05.03.2026**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.நான் மூன்றாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். என்னுடைய சகோதரி இறந்துவிட்டார் அவருடைய வாரிசுகள் தான் இந்த வழக்கில் இரண்டு, மூன்று பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் சரிதான். என்னுடைய மற்றொரு சகோதரி இந்த வழக்கின் முதல் பிரதிவாதி என்றும் சொன்னால் சரிதான்.

2. என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஏற்கனவே பாகம் செய்து அதனை நாங்கள் தனித்தனியே அனுபவித்து வருகிறோம் என்றும் சொன்னால் சரிதான். இந்த தாவா சொத்தானது என்னுடைய தாயாருக்கு அவருடைய தகப்பனார் 1983 ஆம் ஆண்டு தான செட்டில்மெண்ட் மூலமாக கொடுத்த சொத்து என்று சொன்னால் சரிதான்.

3. இதை வழக்கில் என்னுடைய தாயார் பெயரில் இருக்கும் வைப்பீடு ரூபாய் ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 900 ரூபாய்க்கும் சேர்த்து தான் வழக்கு போட்டு இருக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்தை பொருத்தமட்டில் மற்றும் வைப்பு நிதியிலும் முதல் பிரதிவாதிக்கு மூன்றில் ஒரு பங்கு பாகம் இருக்கிறது என்று சொன்னால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.05 19:12:36 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.